Aparajitha

# வெற்றியின் விதைகள்

காலாண்டுச் செய்திமடல்

அக்டோபர் -திசம்பர் 2018

| | | | |
|---|---|---|---|
| 5<br>மாநிலங்கள் | 3<br>மொழிகள் | 39498<br>பள்ளிகள் | 53,05,250<br>மாணவர்கள் |












**28**

**இதழ்**

தனிச்சுற்றுக்கு மட்டும்

## உள்ளடக்கம்

வணக்கம் . . . . . . . . . . . . . . . . . . .2

வாழ்க்கைத்திறன் கல்வித் தன்னார்வலர்கள் . . . . . . . . . . . . . 3

வழிநடத்துநராக வளர்ந்துள்ள மாணவி . . . . . . . . . . . . . . . . . . 4

தளிர்த்திறன் திட்டம்: கற்றலில் இருந்து செயலுக்கு . . . . . . . . . . . 5

அமெரிக்க நண்பர்களின் வருகை. . . 5

அரியானாவில் செயற்கைக்கோள் வழியே . . . . . . . . . . . . . . . . . . 6

சாகச முகாமில் டிம் டிம் தாரே. . . 6

வளரிளம்பருவக் கல்வித்திட்டத்தில் டிம் டிம் தாரே. . . . . . . . . . . . . . .6

குஜராத்தில் செயற்கைக்கோள் வழியே . . . . . . . . . . . . . . . . . . .7

இடைநிலைக்கல்வி இயக்கப் பள்ளிகளில் டிம் டிம் தாரா . . . . . . .7

எதிரொலிகள் . . . . . . . . . . . . . 8

அபராஜிதா அறக்கட்டளை
5அ, வி.பி.இரத்தினசாமி சாலை
பீபீ குளம்
மதுரை 635002

0452-4375252

info@aparajitha.org

# வணக்கம்!

“ஓடும் ஆறே வாழும்” என்பது கவிமொழி. ஏனெனில் நீர்பாய்ந்தோடும் ஆறுதான் ஒவ்வொரு கணமும் தன்னைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கும். அதனைப் போலவே, 'சிந்தனை செயல்படுத்தப்படும் பொழுதே சிறக்கும்' எனலாம். ஏனெனில், சிந்தனை செயல்படுத்தப்பட்டால்தான், அது புதிய புதிய தளங்களில் புதிய புதிய மக்களைச் சென்றடையும்.

அவ்வகையில், தளிர்த்திறன் திட்டம் தன்னார்வலர் வழியாகவும் செயற்கைக்கோள் வழியாகவும் பள்ளிகளை, குழந்தைவள நடுவங்களை, மாலைநேர வகுப்புகளை, மாணவர் முகாம்களை, பயிற்சி வகுப்புகளைச் சென்றடைந்த செய்திகளை இவ்விதழ் பகிர்ந்துகொள்கிறது.

இச்செய்திமடல் புதிய வடிவம், புதிய சிந்தனைகள், புதிய தளங்கள் என தனது பயணத்தைத் தொடரும் வகையில் புதிய ஆசிரியர் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒருவர் இடம்பெறும் அப்புதிய குழு, அடுத்த இதழ் முதல் தொடர்ந்து இவ்விதழை வெளியிடும்.

தொடர்ந்து உங்களின் ஆதரவையும்
ஆலோசனையையும் எதிர்நோக்கும்,

*அரிஅரவேலன்*
*மேலாளர்*

*__த__ளிர்த்திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடக்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், அரியானா ஆகிய 6 மாநிலங்களில் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

# வாழ்க்கைத்திறன் கல்வித் தன்னார்வலர்கள்

தளிர்த்திறன் திட்டம் தமிழ்நாட்டில் உள்ள தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள், அல்லரசு அமைப்புகள் (Non-Governmental Organization), குழந்தைகள் காப்பகம், மாணவர் விடுதிகள், உண்டு-உறைவிடப் பள்ளி, தொழிற்பயிற்சிப் பள்ளி, கல்லூரிகள் என வெவ்வேறு இடங்களில் செயற்படுத்தப்படுகிறது. ஆசிரியரே நேரடியாகக் கற்பித்தல், காணொளி வழி கற்பித்தல், ஒப்பானவர்கள்வழி கற்பித்தல் (Peer Teaching) என்னும் வெவ்வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவ்வரிசையில் தற்பொழுது "வாழ்க்கைத்திறன் தன்னார்வலர்" வழியாகக் கற்பிக்கும் புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சுவேதா என்பவர் மதுரையிலுள்ள ஒரு கல்லூரியில் பி.காம் இரண்டாம் ஆண்டு படிக்கிறார். அதேவேளையில், சுடர் நிறுவனம் என்னும் அல்லரசு அமைப்பு நடத்தும் "நானொரு தலைவர்" (I am a leader) என்னும் திட்டத்திலும் பயிற்சிபெறுகிறார். இத்திட்டத்தின் ஒரு கூறாக 2012 ஆம் ஆண்டிலிருந்து தளிர்த்திறன் திட்டப் பாடங்களும் இடம்பெற்றுள்ளன. எனவே, சுவேதா தளிர்த்திறன் திட்ட வகுப்பில் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பங்கேற்றும் ஒப்பானவர்வழி கற்பித்தல் முறையில் கற்பித்தும் வருகிறார். அதன் பயனை உணர்ந்திருக்கிறார்; அதன் உள்ளடக்கமும் கற்பித்தல் முறையும் அவரைக் கவர்ந்திருக்கின்றன.



அவர் இயல்பிலேயே குழந்தைகளோடு பழகுவதில் ஆர்வமும் கற்பிப்பதில் விருப்பமும் உடையவர். எனவே, தளிர்த்திறன் திட்டப் பாடங்களின் கருத்துகளை தனது வீட்டைச்சுற்றி வாழும் குழந்தைகளுக்குக் கற்பிக்க விரும்பினார். ஆனால், அதனை எப்படிச் செய்வது என்று தெரியவில்லை. இந்நிலையில், சுடர் நிறுவனத்தில் புதிதாகச் சேர்ந்திருக்கும் மாணவர்களுக்கான தளிர்த்திறன் திட்ட அறிமுகக் கூட்டம் நடந்தது. அதில், தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கென தனியே தளிர்த்திறன் திட்டப் பாடங்கள் இருப்பதை அறிந்தார். அதனை தனது வீட்டிற்கு அருகில், மதுரை சம்பந்தர் ஆலங்குளம் என்னுமிடத்திலுள்ள இராஜீவ்காந்தி மழலையர் தொடக்கப்பள்ளியில் கற்பிக்க அனுமதிபெற்றார். 2018 சூலை முதல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் அப்பள்ளியில் பயிலும் 20 குழந்தைகளுக்கு வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்கி வருகிறார்.

சுவேதாவின் இந்த முயற்சியைக் கண்டு ஊக்கம்பெற்றார் ஜெயசூரியா. இவர் பி.எஸ்ஸி இரண்டாம் ஆண்டு படிக்கிறார்; "நானொரு தலைவர்" திட்டத்திலும் பயிற்சிபெறுகிறார். மாலை வேளையில் தனது வீட்டில் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் சிலருக்கு டியூசன் நடத்துகிறார். அவ்வகுப்பில் 2018 ஆகஸ்டு முதல் வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்குகிறார்.

இம்மாணவர்களின் ஆர்வத்தையும் முயற்சியையும் கண்ட சுடர் நிறுவனம், "வாழ்க்கைத்திறன் கல்வித் தன்னார்வலர்கள்" என்னும் திட்டத்தைத் தொடங்கி, மேலும் பல மாணவர்களை இம்முயற்சியில் ஈடுபடுத்தத் திட்டமிட்டு இருக்கிறது. இந்தத் தன்னார்வ வடத்தை சுவேதா, ஜெயசூரியா என ஒவ்வொருவராகக் கூடிப்பிடித்து "வாழ்க்கைத்திறன் கல்வி" என்னும் தேரை இழுக்கிறார்கள்; இழுப்பார்கள்.

*- நா. காயத்ரி*

## வழிநடத்துநராக வளர்ந்துள்ள மாணவி

மதுரையில் கரும்பாலை என்னும் குடிசைப்பகுதியில் அமைந்திருக்கிறது மதுரை சீடு (Madurai SEED) என்னும் அல்லரசு அமைப்பு. அந்நிறுவனத்திற்கு வரும் 30 தன்னார்வலர்களுக்கு தளிர்த்திறன் திட்ட மாதிரிவகுப்பு 4 ஆகஸ்ட் 2018ஆம் நாள் வழிநடத்தப்பட்டது. முதலில் தளிர்த்திறன் திட்டப் பாடம் ஒன்றின் சில நிறுத்தங்கள் வரை அபராஜிதாப் பணியாளர் வழிநடத்தினார். பின்னர், ஆர்வமுள்ளவர்கள் முன்வந்து மீதமுள்ள பாடத்தை வழிநடத்தலாம் என அறிவித்தார்.




பி.ஏ. 2ஆம் ஆண்டு படிக்கும் விந்தியா தானாக முன்வந்து சிறப்பாக வழிநடத்தினார். அவருடைய ஈடுபாட்டையும் உற்சாகத்தையும் கண்டு, "வகுப்பு நடத்த வேண்டும் என்னும் வெல்விளியை (Challenge) ஏற்க உங்களைத் தூண்டியது எது?" என வினவியபொழுது, "நான் எட்டாம் வகுப்பிலிருந்து மதுரை சீடு நிறுவனத்தில் தளிர்த்திறன் திட்டப் பாடங்களைப் படிக்கிறேன். அதனால்தான் தன்னம்பிக்கையோடு இப்பொழுது இப்பாடத்தை வழிநடத்தினேன்" என்றார் புன்னகையோடு. தற்பொழுது அவரோடு இணைந்து அவர் நண்பர்கள் பி.எஸ்ஸி, முதலாண்டு பயிலும் காளீஸ்வரி, பி.காம். முதலாண்டு பயிலும் மெக்கத் நிலவு ஆகியோர் தளிர்த்திறன் திட்டப் பாடங்களை அங்கு வரும் மாணவர்களுக்குத் தொடர்ந்து கற்பிக்கின்றனர்.

## தளிர்த்திறன் திட்டம்: கற்றலில் இருந்து செயலுக்கு

மதுரையிலுள்ள ம.அ.நா.உ.பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் அருணாதேவி 9ஆம் வகுப்பில் நுழைந்தபொழுது, அவ்வகுப்பறையின் ஒரு மூலையில் பழைய உடைகள் அடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தார். அவை ஏன் அங்கே இருக்கின்றன என்று அவருக்குத் தெரியவில்லை. மாணவிகளிடம் கேட்டார். விஷ்ணுபிரியா, ஐஸ்வரியலெட்சுமி, ஜாய்பிரின்ஸி, மோனிகா, பத்மபிரியா ஆகிய ஐவரும் எழுந்து, "கடந்த தளிர்த்திறன் திட்ட வகுப்பில் கண்ட "கொடைகொடுத்துப் பழகுக" பாடம் எங்களை மிகவும் ஈர்த்தது. அதனால் எங்களிடமிருந்த பயன்படுத்தாத பழைய உடைகளை தேவைப்படுவோருக்குக் கொடுக்கலாம் என முடிவுசெய்தோம். ஆனால், யாருக்குக் கொடுப்பது என்று தெரியவில்லை. எனவே, பள்ளிக்கு அவற்றைக் கொண்டுவந்துள்ளோம். நீங்கள் வந்ததும் உங்களிடம் கலந்துபேசி அதற்கான வழியைக் கண்டுபிடிக்கலாம் எனக் காத்திருக்கிறோம்" என்றனர். பின்னர், தேவைப்படும் மாணவர்களைக் கண்டறிந்து அந்த உடைகளை வழங்க ஆசிரியர் உதவினார். "தளிர்த்திறன் திட்டப் பாடங்கள் மாணவர்களைக் கவர்ந்திருக்கின்றன; அதன் வழியாகக் கற்றவற்றை மாணவர்கள் தமது வாழ்வில் பின்பற்ற முயல்கிறார்கள் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு. தொடர்ந்து அவற்றைக் கற்றால் அவர்களின் நடத்தையில் மாற்றங்கள் படிப்படியாக மலரும் என நம்புகிறேன்" என்கிறார் அந்த ஆசிரியர்.



## அமெரிக்க நண்பர்களின் வருகை

அமெரிக்க நாட்டிலுள்ள மிசிகன் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் ஈ.ஆர்.பி நிறுவனத்தில் முதுகலை வணிக நிர்வாகவியல் பயில்கிறார் திருமிகு கிறிஸ்டோபர் எல் ஓவன். இவர் தொழில்முனைவு பற்றி ஆய்வு செய்வதற்காக மதுரைக்கு வந்திருந்தார். தளிர்த்திறன் திட்டத்தின் நோக்கமும் உள்ளடக்கமும் அவரை ஈர்த்தன. அதனைப்பற்றி, தன்னைக் காண வந்திருந்த தன் தம்பியும் அமெரிக்காவில் கணித ஆசிரியராகப் பணியாற்றுபவருமான திருமிகு ஜோசியாவிடம் தெரிவித்திருக்கிறார். அவர்கள் இருவரும் 27-07-2018ஆம் நாள் மதுரையில் உள்ள க.கொ. தொடக்கப்பள்ளிக்கும் உயர்நிலைப்பள்ளிக்கும் வருகை தந்தனர். அங்கு பள்ளியின் தாளாளர், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருடன் தளிர்த்திறன் திட்டம் பற்றியும் அதனால் மாணவர்களின் இளம்மனங்களில் ஏற்பட்டிருக்கும் விளைவுகளைப் பற்றியும் கலந்துரையாடினர். அதன் பின்னர் அவர்கள் வழங்கிய பின்னூட்டத்தை https://youtu.be/Y0FqNFak5b4 இந்த இணைப்பிலுள்ள காணொளியில் காணலாம்.

- மு. செந்தில்குமார்

## அரியானாவில் செயற்கைக்கோள் வழியே. . .

அரியானா மாநிலத்தில் கடந்த கல்வியாண்டின் இறுதியில் கல்விச் செயற்கைக்கோளின் வழியே தளிர்த்திறன் திட்டத்தின் இந்திவடிவமான டிம் டிம் தாரே பாடங்கள் ஒளிபரப்பப்பட்டன. அவற்றின் தொடர்ச்சியாக இவ்வாண்டும் ஒளிபரப்ப 21-8-2018ஆம் நாள் ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அதன்படி ஒவ்வொரு வாரமும் புதன் கிழமையும் சனிக்கிழமையும் காலை 10 முதல் 11 மணி வரை 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான பாடங்கள் ஒளிபரப்பட உள்ளன. அவ்வகையில் இக்கல்வி ஆண்டின் இறுதிக்குள் 39 பாடங்கள் ஒளிபரப்பட உள்ளன. இதனால், 12,000 பள்ளிகளில் பயிலும் 12,60,000 மாணவர்கள் இப்பாடங்களைப் பயில்கின்றனர். அதன் முதற்படியாக 2018 செப்டம்பர் மாதத்தில் 7 ஒளிபரப்புகள் நிகழ்ந்தன.

## சாகச முகாமில் டிம் டிம் தாரே

அரியானா மாநில கல்வித்துறையின் சார்பில் 2018 செப்டம்பர் 16 முதல் நவம்பர் 30 வரை 7 சாகச முகாம்கள் பல்வால் மாவட்டம் கட்பூரி நகரிலுள்ள தேசிய இளைஞர் சாகச பயிற்சி நிறுவனத்தில் நடைபெறுகின்றன. மாணவர்கள் தமது உடல்நலம், மனநலம், உணர்வுநலம் ஆகியவற்றைப் பேணுவதையும் தொடர்ந்து மேம்படுத்துவதையும் ஊக்குவிக்கும் நோக்கத்தோடு இந்த சகாச முகாம்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. எனவே, செப்டம்பர் 16 முதல் 20 வரை, 24 முதல் 28 வரை நடைபெற்ற இரண்டு முகாம்களில் பங்கேற்ற 600 மாணவர்களுக்கு டிம் டிம் தாரே பாடங்களைப் பயன்படுத்தி மனநலம், உணர்வுநலம் ஆகியன பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## வளரிளம்பருவக் கல்வித் திட்டத்தில் டிம் டிம் தாரே



இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும் (MHRD) தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பும் (NACO) இணைந்து வளரிளப்பருவக் கல்வித் திட்டத்தை உருவாக்கி இருக்கின்றன. அஃது ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலக் கல்வித்துறை வழியாகச் செயற்படுத்தப்படுகிறது. அவ்வகையில் அரியானா மாநிலக் கல்வித் துறையின் வழியாக பல்வால் மாவட்டம் கட்பூரி நகரிலுள்ள தேசிய இளைஞர் சகாச பயிற்சி நிறுவனத்தில் செப்டம்பர் 24ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை 196 பள்ளிகளைச் சேர்ந்த 392 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. அதில் டிம் டிம் தாரேயின் பாடங்களைப் பயன்படுத்தி வாழ்க்கைத்திறன் கல்வி வழங்கப்பட்டது.

- நன்கி சலூஜா

# குஜராத்தில் செயற்கைக்கோள் வழியே. . .



கடந்த கல்வியாண்டு முதல் அரியானா, இராஜஸ்தான் மாநிலங்களில் செயற்கைகோள் வழியே டிம் டிம் தாரே பாடங்கள் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. அவற்றின் தொடர்ச்சியாக இக்கல்வியாண்டில் குஜராத் மாநில கல்வித்துறையும் தளிர்த்திறன் திட்டத்தின் குஜராத்தி வடிவமான டிம் டிம் தாரா பாடங்களை செயற்கைகோள் வழியே ஒளிபரப்புகிறது.

6, 7, 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கான டிம் டிம் தாரா பாடங்கள் ஒவ்வொரு புதன்கிழமையும் காலையில் ஒரு மணிநேரம் 'வந்தே குஜராத் தொலைக்காட்சி 6, 7, 8' ஆகியவற்றின் வழியாக ஒளிபரப்பப்படுகின்றன. மீண்டும் அதே பாடங்கள் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பிற்பகலில் ஒரு மணி நேரம் ஒளிபரப்படுகின்றன. இதனால், 26,500 பள்ளிகளில் பயிலும் 39,75,000 மாணவர்கள் இப்பாடங்களைப் பயில்கின்றனர். முதல் ஒளிபரப்பு 30 ஆகஸ்ட் 2018ஆம் நாள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து செப்டம்பர் இறுதிக்குள் 12 டிம் டிம் தாரா பாடங்கள் ஒளிபரப்பப்பட்டு உள்ளன. மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றுக் கற்கின்றனர். 10 பள்ளிகளில் மாணவர்கள் சிலரே ஒப்பானவர்வழி கற்றல் முறையில் பாடங்களை வழிநடத்தினர்.

# இடைநிலைக் கல்வி இயக்கப் பள்ளிகளில் டிம் டிம் தாரா

அனைவருக்கும் கல்வி என்னும் பெருநோக்கில் இயங்கும் தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்தின் கீழ் குஜராத்தில் 73 மாதிரிப்பள்ளிகளும் 20 உயர்நிலைப் பள்ளிகளும் இயங்குகின்றன. அப்பள்ளிகளில் கடந்த கல்வியாண்டில் டிம் டிம் தாரா அறிமுகம் செய்யப்பட்டது. அதனால் அப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களிடம் நல்ல நடத்தை மாற்றங்கள் ஏற்பட்டன. எனவே, அந்த இயக்கத்தின் கீழ் இயங்கும் 500 மாதிரி உண்டுஉறைவிடப் பள்ளிகளுக்கு டிம் டிம் தாரா விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்பள்ளிகளில் பணியாற்றும் 320 ஆசிரியர்களுக்கு படான் (சூலை 21), அகமதாபாத் ஊரகம் (சூலை 24), பனஸ்காந்தா (ஆகஸ்டு 2), ஆனந்த் (ஆகஸ்டு 11), வதோரா (ஆகஸ்டு 27), மார்பி (ஆகஸ்டு 31) ஆகிய இடங்களில் மாதிரி வகுப்புகளுடன் பயிற்சி வழங்கப்பட்டது.

- கிருஷ்ண படேல்

# எதிரொலிகள்

தளர்த்திறன் திட்டம் இன்னொரு மைல்கல்லை அடைந்திருப்பதற்கு மனமார்ந்த பாராட்டுகள்!

**- மரு. ஹரிப்ரியா அரவிந்த்**

தலைவர் - கண்புரை மருத்துவப்பணி,
அரவிந்த் கண் மருத்துவமனை,
மதுரை, தமிழ்நாடு.

அற்புதமான வளர்ச்சி! இது உங்களது உன்னிப்பான திட்டமிடலாலும் அதனைச் செயற்படுத்தலாலும் ஏற்பட்டிருக்கிறது, உங்களது எதிர்கால முயற்சிகள் அனைத்திற்கும் நல்வாழ்த்துகள்!

**- கே. சாரதி**

முதல்வர், சுந்தரம் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி,
ஆவியூர், தமிழ்நாடு.

நன்று! எனது கனவு நனவாகிக்கொண்டிருக்கிறது. குழந்தைகள் அனைவரும் புன்னகையோடும் செயலூக்கத்தோடும் பங்கேற்பதைக் காண மகிழ்ச்சியாக இருக்கிறது.

**-என்.ஏ.என். நாராயணன்**

மதுரை, தமிழ்நாடு.

டிம் டிம் தாரா ஆலமரத்தைப்போல வளர்ந்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டு முடிந்த பின்னரும் வதோதரா மாவட்டத்தில் பயிலும் மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் மாற்றங்கள் ஏற்படுவதைக் காண்கிறேன். எனவே, வதோதரா மாவட்டம் பிற மாவட்டங்களுக்கும் பிற மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக இருக்கிறது என நம்புகிறேன். கோடைக்காலத்தில் குல்மோகர் மரத்தின் நிழலிருப்பதைப் போன்ற உணர்வை டிம் டிம் தாரா மாணவர்களுக்குத் தருகிறது. தற்பொழுது இது செயற்கைக்கோள் வழியாகவும் ஒளிபரப்பப்படுவதால் மகிழ்கிறேன்.

**- முனைவர் எம். என். படேல்**

மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர்
வதோதரா மாவட்டம், குஜராத்.

அபராஜிதா அறக்கட்டளை செயல்பாடுகள், அனுபவப்பகிர்வு ஆகியவற்றின் வழியாக மாணவர்களின் மனதில் நற்கொள்கைகளைப் நிறுவும் பணியைச் செய்கிறது; இது செயல்திறன்மிக்க கருத்தாக்கம் ஆகும். இது செயற்கைக்கோள் வழியாக ஒளிபரப்பாகும் பொழுது குஜராத் மாநிலம் முழுவதும் உள்ள மாணவர்களை ஈர்க்கும்.

**- பங்கஜ்**

வட்டார வளமைய ஒருங்கிணைப்பாளர்
காந்திநகர், குஜராத்

வெற்றியின் விதைகள், தனது பெயருக்கு ஏற்றபடி முத்தான விதைகளை உருவாக்கி வருவது பாராட்டுக்கு உரியது. கோடை முகாம்களில் குழந்தைகள் ஆர்வமுடன் பங்கேற்றதைக் காண முடிந்தது. உங்களின் மதிப்புக்குரிய பணி மென்மேலும் தொடர வாழ்த்துகள்!

**- இரா. செண்பகதேவி**

மேலாளர், அபராஜிதா,
மதுரை, தமிழ்நாடு.